விழுப்புரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3362/அ1/2018, நாள்.09.06.2018.

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – இராம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளி – இளநிலை உதவியாளர் செல்வி.செள.வினோத வர்த்தினி என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை :
1. சென்னை–3, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழு துணைச் செயலாளரின் கடிதம் 8991/PSD-2015/நாள்.13.01.2016.
2. சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.45090/அ4/இ1/2014, நாள்.30.01.2016.
3. விழுப்புரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.560/அ1/2016, நாள்.03.02.2016.
4. இராம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் கடிதம் 148/2018, நாள்.03.05.2018.

------

பார்வை–1ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி–IVன் கீழ் இளநிலை உதவியாளராகத் தேர்வு செய்யப்பட்டு பார்வை–3ல் காணும் விழுப்புரம் மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைக் கடிதத்தின்படி இளநிலை உதவியாளராக நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டதின் அடிப்படையில் 04.02.2018 முற்பகல் முதல் இராம்பாக்கம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பணிபுரிந்து வரும் செல்வி.செள.வினோத வர்த்தினி, என்பவர்க்கு தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ்வரும் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பணியாளர் பெயர் | : | செல்வி.செள.வினோத வர்த்தினி |
| 2 | பதவி | : | இளநிலை உதவியாளர் |
| 3 | பணிபுரியும் பள்ளி | : | அரசு மேல்நிலைப் பள்ளி, இராம்பாக்கம் |
| 4. | பிறந்த தேதி | : | 19.06.1989 |
| 5. | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | : | 04.02.2016 முற்பகல் |
| 6. | நியமன முறை | : | நேரடி நியமனம் (TNPSC Group IV) |
| 7. | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்படும் நாள் | : | 04.02.2016 முற்பகல் |
| 8. | தகுதிகாண் பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் | : | மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு நிறைவான பணிக்காலம். |

மேலும் இவருக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர் மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவக் காலத்திற்குள் இவர் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்விலும், பவானிசாகர் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியிலும் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பின்னர் தான் இரண்டாவது பருவகால ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

இவருக்கு தற்போது பணிவரன்முறை செய்யப்படுவது இளநிலை உதவியாளர் பதவியில் முன்னுரிமையாக அமையாது என்றும், மாநில முன்னுரிமைப் பட்டியலின்படியே இவரது முன்னுரிமை அமையும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணிவரன்முறை செய்யப்பட்டதற்கான பதிவுகளை சம்பந்தப்பட்டவரது பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்படுவதுடன் அன்னாரது பணிப்பதிவேடு ஒரு தொகுதி (1) இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இணைப்பு— பணிப்பதிவேடு 1 தொகுதி.

11/6/13

மாவட்டக் கல்வி அலுவலர்,
விழுப்புரம்.

பெறுநர்
செல்வி.செள.வினோத வர்த்தினி,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராம்பாக்கம் (தலைமை ஆசிரியர் மூலமாக)

நகல்
தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
இராம்பாக்கம்.